சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.09.03.2026
OS.No.29/2021
PW3 : கிருத்திகா (வயது 27 ) த/பெ. துரைராஜ்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
(இ.ம.எண்கள் 6/2025 மற்றும் 7/2025 மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் வாதி தரப்பு சாட்சி மீண்டும் திறக்கப்பட்டு, கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது )

<u>முதல் விசாரணை</u>

நான் சிறுகாம்பூர், துணை அஞ்சல் அலுவலகத்தில் Daksevak ஆக அஞ்சல் தபாலை சார்வு செய்யும் பணியில் 2019 ஆம் வருடத்திலிருந்து இருந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கறிஞர் செந்தில் குமார் என்பவரின் பெயரில் பைரோஜா என்பவருக்கு அனுப்பப்பட்ட அஞ்சல் தபாலை நான் சம்மந்தப்பட்ட முகவரிக்கு சென்று சார்வு செய்தேன். அப்போது அதனை பெற்றுக்கொண்ட நபரின் பெயர் பாத்திமா என்பதால் அவர் அந்த பெயரில் அவரது கையெழுத்தை அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையெழுத்திட்டார். நான் அதற்கு பாத்திமா பெயரில் போடப்பட்ட கையெழுத்தை சுழித்துவிட்டு, எந்த பெயரில் தபால் வந்ததோ அந்த பெயரில் கையொப்பம் செய்யுமாறு அவரிடம் கூறினேன். அவர் அதற்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை, சரி என்று கூறி பைரோஜா என்ற பெயரில் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் கையொப்பம் செய்துள்ளார்.

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் அது சம்மந்தப்பட்ட அலுவலக ஆவணங்களை கொண்டு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் டெலிவரி ஸ்லிப் எங்கள் அலுவலகத்தில் தற்போது பராமரிப்பில் இல்லை. பொதுவாக 2 வருட காலம் மட்டுமே அது குறித்த டெலிவரி ஸ்லிப் எங்கள் அலுவலக பராமரிப்பில் இருக்கும். மேற்படி டெலிவரி ஸ்லிப் அடங்கிய பதிவேட்டை தலைமை அஞ்சல் அலுவலகம், துறையூருக்கு ஏற்கனவே அனுப்பி விட்டோம்.

நான் தான் மேற்படி அஞ்சல் தபாலை சார்வு செய்தேன் என்ற முறையில் எனக்கு தெரிந்த தகவல்கள் என்ன என்றால் டெலிவரி ஸ்லிப்பிலும் பாத்திமா என்று அந்த நபர் கையொப்பம் செய்திருந்தார் அதனை நான் தான் சுழித்துவிட்டு அஞ்சல் தபாலில் குறிப்பிட்டுள்ள பெயரில் கையொப்பம் இடுமாறு சொன்னேன். அதற்கு அவர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காமல் சரி என்று கூறி பைரோஜா என்ற பெயரில் டெலிவரி ஸ்லிப்பிலும் கையொப்பம் செய்துள்ளார்.

டெலிவரி ஸ்லிப் அடங்கிய பதிவேட்டை தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பிய விவரங்கள் சம்மந்தமாக எங்கள் அலுவலக ஆவணத்தின் சான்றிட்ட நகலை சமர்பிக்கிறேன் அது **சா.சா.ஆ.1** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என் முன்னிலையில் போடப்பட்ட கையெழுத்தா என்றால் ஆமாம். சாட்சி தானாக முன்வந்து நான் தான் எங்கு கையெழுத்து போடவேண்டும் என்று இன்ட் என்ற குறியீட்டை அஞ்சலக ஒப்புதல் அட்டையில் குறிப்பிட்டு காட்டியுள்ளேன் என்று குறிப்பிட்டு கூறுகிறார். பாத்திமா என்ற பெயரை நான் தான் சுழித்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் பை என்று எழுதி எதனால் அடிக்கப்பட்டுள்ளது என்றால் நான் இன்ட் என்று குறியிடப்பட்ட இடத்தில் கையொப்பம் செய்யாமல் அதன் கீழ் உள்ள பகுதியில் கையொப்பம் செய்ய சென்றதால், நான் அதனை அடித்துவிட்டு இன்ட் என்று குறியிட்ட இடத்தில் செய்யுமாறு அவரிடம் கூறினேன்.

வா.சா.ஆ.3 ல் ஏற்கனவே பாத்திமா என்று கையெழுத்திட்ட பேனாவும் , பை என்று எழுதி அடிக்கப்பட்ட பேனாவும் நன்கு திக்கான பேனா மையினால் எழுதியதாக உள்ளது என்றும் ஆனால் பைரோஜா என்ற பெயரில் இடப்பட்ட கையெழுத்துக்குரிய பேனா மை லைட்டாக இருப்பதன் காரணம் என்ன என்றால் காரணம் சரியாக ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நான் பேனாவை மாற்றி கொடுத்திருக்கலாம் அல்லது சில

நபர்கள் புத்தகத்தின் மீது கையொப்பம் செய்தால் அழுத்தமாகவும், கையில் வைத்து கையொப்பம் செய்தால் லேசாகவும் பேனா மை விழுந்திருக்க வாய்ப்புள்ளது. அன்றைய தினம் என் முன்னிலையில் தான் மேற்படி கையெழுத்தை அவர் செய்தார்.

நான் எந்த முகவரிக்கு சென்று மேற்படி அஞ்சல் தபாலை கொடுத்தேன் என்றால் பாத்திமா என்பவர் சிறுகாம்பூரில் சாதிக் மீன் கடை நடத்தி வருகிறார் அவர் கடையில் இருப்பார் என்பதால் நான் கடைக்கு சென்று அஞ்சல் தபாலை கொடுத்தேன். அஞ்சல் தபால் எந்த முகவரிக்கு வந்தது என்றால் வீட்டு முகவரிக்கு வந்தது.

எனக்கு அந்த ஏரியாவில் உள்ள நபர்கள் அனைவரையும் நன்றாக தெரியும், அதனால் நான் அவர் கடையில் இருப்பார் என்று நினைத்து கடைக்கு சென்று அஞ்சல் தபாலை கொடுத்தேன். அவரை ஊரில் என்ன பெயர் சொல்லி அழைப்பார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் கேட்டுக்கொண்டதன்பேரில், பைரோஜா என்று அவர் கையொப்பம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் நான் அவரிடம் அது குறித்து கேட்டதற்கு அவருக்கு இரண்டு பெயர் இருப்பதாகவும், தன்னை பைரோஜா என்று அழைப்பார்கள் என்றும் என்னிடம் கூறினார், அதன் பிறகு தான் நான் அவரிடம் அஞ்சல் தபாலை கொடுத்தேன், பாத்திமா என்று கையொப்பம் செய்ததால், எந்த பெயரில் தபால் வந்ததோ அந்த பெயரில் கையொப்பம் செய்யுமாறு நான் கேட்டேன். அதற்கு அவர் சரி என்று கூறி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். அவர் கைரோஜா என்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தாரா அல்லது பைரோஜா என்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தாரா என்றால் பைரோஜா என்று தான் கையொப்பம் செய்தார்.

(<u>நீதிமன்ற குறிப்பு</u> - இரு தரப்பினரையும் அழைத்தும் ஆஜராகவில்லை. சாட்சி ஏற்கனவே இரண்டு முறை ஆஜராகியுள்ளார். சிறப்பு அனுமதி விடுப்பினை ஏற்கனவே எடுத்துவிட்டேன் என்பதால் இன்னொரு முறை ஆஜராவதில் தனக்கு சிரமம்

இருப்பதாக சாட்சி கூறியதை கவனத்தில் கொண்டு, இரு தரப்பு வாதுரைகள் மற்றும் சாட்சியத்தின் அடிப்படையில் சாட்சி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் )

/ signed/
கிருத்திகா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.03.09 17:20:31 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி